**STC.192/2023**
**23.11.2023**
திரு. – ராஜாங்கம் PW1
சாட்சியிடமிருந்து ஆதார் அடையாள அட்டை பெறப்பட்டது.

சத்திய பிரமாணத்தின் வாக்குமூலத்தின் பேரில் புகார்தாரர் தரப்பு சாட்சி முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் புகார்தார் ஆவேன். எனது தரப்பு வாக்குமூலத்தை எழுத்து பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 1. 09.05.2023 எதிரி கொடுத்த ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் காசோலை எண்.948982. 2. 14.06.2023 புகார்தாரர் வங்கி வழங்கிய திருப்பப்பட்ட மெமோ. 3. 05.07.2023 புகார்தாரர் வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்பு. 4. 05.07.2023 வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சலக ரசீது. 5. எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அறிவிப்பு.